

துணை முதல் அமைச்சர், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் அறந்தாங்கி அரசு தலைமை மருத்துவமனையில் நவம்பர் 27 அன்று பிறந்த எட்டு குழந்தைகளுக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன் தலைமையிலும், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இரா.தமிழ் ராசு, கவிக்குமார், அருண்குமார், முகமது ரபிக், இளையராஜா, நசுருதீன் ஆகியோரது முன்னிலையிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி தங்க மோதிரம் அணிவித்தார். இந்நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர் அடைக்கலம், தீர்மானக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.ராமநாதன், நகர செயலாளர் க.ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் வே.பொன்துரை, அரு. வடிவேலு, அணி அமைப்பாளர்கள் தி. முத்து , கோ.சக்திவேல், பழனியப்பன் , ஹரி விமலாதி, கருணாகரன், பாத்திமா பீவி மற்றும் ஒன்றிய நகர இளைஞரணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தஞ்சையில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# விவசாயிகளுக்கு 48 பாரம்பரிய நெல் விதைகள் வழங்கல்!

## கழகத்தினர் பங்கேற்பு!

தஞ்சாவூர், நவ. 30 -

தமிழ்நாட்டின் துணை முதல்வர், கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த தப்பாட்டம், களவாணி2, பட்டத்து அரசன், டானி, நந்தன் உள்ளிட்ட பல்வேறு படங்களில் கதாநாயகனாகவும், வில்லனாகவும் நடித்த துரை.சுதாகர் 48 விவசாயிகளை தேர்வு செய்து, 48 பாரம்பரிய நெல் விதைகளை வழங்கினார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் காட்டிய பாதையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழியில், தமிழ்நாடு மக்களின் நலனுக்கான உழைத்துக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்வு சிறக்கவும், செழிக்கவும் அவருடைய 48வது பிறந்த நாளையொட்டி 48 பாரம்பரிய நெல் விதைகளைப் பரவலாக்க முடிவெடுத்து. நம் முன்னோர் தேடிக் கண்டு பிடித்த பாரம்பரிய நெல் ரகங்களில் காட்டுயாணம், குடவாழை, மிளகு சம்பா உள்ளிட்ட 48 நெல் ரகங்களை முதற்கட்டமாக 48 ஏழை விவசாயிகளுக்கு வழங்கி இருக்கிறோம்.

இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகளை கண்டறிந்து அவர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட பாரம்பரிய நெல் விதைகளை மேலும் 48 கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கி இன்னும் பெரிதாக விதைப் பரவல் செய்ய இருக்கிறோம். ஐயா கலைஞரின் பாரம்பரியம் பல்லாண்டு, பல நூறாண்டுகள் தளைக்க, பாரம்பரிய நெல்லை பரப்புவதே உரிய கடமையாக இருக்கும் என நம்புகிறேன்.

நெல் விதைகளை வழங்குவதோடு இல்லாமல், அவைகளை விதைத்து நெல் மணிகள் அறுவடை செய்யும் வரை கண்காணித்து அவர்களை ஊக்கப்படுத்தவும் உள்ளோம்.

இதனால் பாரம்பரியம் மறவாத, ரசாயனம் கலக்காத நெற்பயிர்களை மீட்டுருவாக்கம் செய்வதன் மூலம் பசுஞ்சோலையாக இயற்கையான நெற்களஞ்சியமாக தமிழ்நாடு உருவாகும். அதேபோல் விஷமற்ற அறுவடையும் சத்தான உணவுமே நாளைய சந்ததிக்கு மிக அவசியம். இத்தகைய நல்ல நோக்கத்தால்தான் இந்தப் பாரம்பரிய விதைப் பரவல் எண்ணத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளில் செயல்படுத்துகிறோம்.

பெயரளவில் மட்டும் இல்லாமல் காலத்துக்கும் நிலைத்து நிற்கக்கூடிய அளவுக்கு துணை முதல்வர் உதயநிதி அவர்களின் பெயரில் இனிவரும் ஒவ்வொரு வருடமும் இந்த விதைப் பரவல் எண்ணம் பெரிதாக்கப்படும். அடுத்தடுத்த வருடங்களில் ஒவ்வொரு பாரம்பரிய நெல் விதையைக் கூடுதலாக்கி விவசாயிகளுக்கு வழங்கி விளைவிக்கவும், அதனை அடுத்தடுத்த கிராமங்களுக்குப் பரப்பவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

'மக்களுக்குப் பயனுள்ளதைச் செய்யுங்கள். அதுதான் நீங்கள் எனக்குக் கொடுக்கும் அன்புப் பரிசு' என்றார் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அவரின் வாக்கையே வேத வாக்காக ஏற்று மக்கள் பயனுறும் வகையில் துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாள் பரிசாக இந்த விதைப் பரவல் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறோம். நடவு தொடங்கி அறுவடை வரையிலான இந்தத் திட்டத்தின் அத்தனை நிகழ்வுகளையும் மக்கள் முன்னிலையில் கட்சி நிர்வாகிகளுக்கும் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்தி இந்த விதைப் பரவலை நிச்சயம் பெரு வெற்றி அடையச் செய்வோம்.

இவ்வாறு திரைப்பட நடிகர் துரை.சுதாகர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சை மத்திய மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆர்.ராணி கண்ணன், திருக்கானூர்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் சேவியர், வல்லம் கோவிந்தன், லாசர் உள்ளிட்ட விவசாயிகள் மற்றும் பொது மக்கள் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான 27.11.2024 அன்று ஓசூர் அரசு தலைமை மருத்துவமனையில் பிறந்த 11 குழந்தைகளுக்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் தங்க மோதிரம் அணிவித்து வாழ்த்து கூறினார், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட மருத்துவர் அணி சார்பாக பிறந்த குழந்தைகளுக்கு பயன்படுத்தக்கூடிய மருத்துவ உபகரணங்களை மருத்துவர்கள் பூபேஷ்கார்த்திக், நவீன், பிரியதர்ஷினி, அரவிந்த் ஆகியோரது ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாநகர செயலாளரும் மேயருமான எஸ்.ஏ.சத்யா, அவைத்தலைவர் யுவராஜ் , துணை மேயர் ஆனந்தய்யா, மாவட்ட , மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி, தலைமை செயற்குழ உறுப்பினர் எல்லோராமணி, பொதுக்குழு உறுப்பினர் தனலட்சுமி, ஒன்றிய செயலாளர்கள் கஜேந்திரமூர்த்தி, நாகேஷ் உட்பட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், தும்பைபாச்சேரி கிராமத்தைச் சேர்ந்த சி.சம்பத்குமார் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் 23.11.2024 அன்று தும்பை கிராமத்தில் உள்ள அன்னாரது வீட்டிற்கு நேரில் சென்று,அன்னாரது உடலுக்கு மாலை அணிவித்து அரசின் சார்பில் அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார், அப்போது கோட்டாட்சியர் லூர்துசாமி, தாசில்தார் சசிகலா,காவல் ஆய்வாளர் விநாயக முருகன், உதவி ஆய்வாளர் லோகேஸ்வரன், வருவாய் ஆய்வாளர் திவ்யா,கிராம நிர்வாக அலுவலர் மாரியாப் பிள்ளை மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# வள்ளுவர் கோட்ட புனரமைப்புப் பணிகளை விரைந்து முடித்திடுக!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்து - அதிகாரிகளுக்கு உத்தரவு!



சென்னை, நவ.30 -

“திருக்குறள்“ என்ற தமிழ் இலக்கியத்தை, 2000-ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் படைத்த அய்யன் திருவள்ளுவருக்கு ஒரு வரலாற்று நினைவுச் சின்னமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், சென்னை மாநகரில் 5 ஏக்கர் பரப்பளவில் 18.9.1974 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, 1976-ஆம் ஆண்டில் வள்ளுவர் கோட்டம் முடிக்கப்பட்டது.

திருவாரூர் ஆழித்தேரை மாதிரி வடிவமாக கொண்டு, பல்லவக்கலை சிற்ப வேலைப்பாடுகளுடன் கல்தேரும், (உயரம் 128 அடி), காந்தார கலை வடிவில் தோரண வாயிலும், திராவிட கட்டடக் கலையைப் பிரதிபலிக்கும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் சிற்பி கணபதி அவர்களைக் கொண்டு இரண்டு ஆண்டுகளில் “வள்ளுவர் கோட்டம்“ அமைக்கப் பட்டு, சுற்றுலா தலமாக இருந்தது.

முந்தைய ஆட்சியாளர்களால் அது பராமரிக்கப்படாததால், சிதிலடைந்து, பொலிவை இழந்து மோசமான நிலையில் இருந்ததை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வள்ளுவர் கோட்டத்தை புனரமைக்க ரூ.80 கோடி வழங்கி, 18.1.2024 அன்று பணிகள்துவங்கப்பட்டன.

பொதுப்பணித்துறை மூலமாக நடைபெற்று வரும் இப்பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (28.11.2024) நேரடியாக களத்திற்குச் சென்று நடைபெற்று வரும் வள்ளுவர் கோட்டப் புனரமைக்கும் அனைத்து பணிகளையும் ஒவ்வொன்றாக ஆய்வு செய்தார்.

தற்போது நடைபெற்று வரும் மேம்பாட்டு பணிகளான, கலையரங்கம், குறள்மணி மாட கூரை புனரமைப்பு, தரைகள் புதுப்பித்தல், குறள் மணி மாட ஓவியம் சீரமைத்தல், வளாக சுற்றுச் சுவர் புதுப்பி த்தல், தூண்கள், நுழைவாயில் பகுதிகளில் சிற்ப வேலைபாடுகள், மாற்றுத் திறனாளிகள் நடைபாதை, முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்தேயக மின் தூக்கி, பலநிலை வாகன நிறுத்து மிடம், உணவுக்கூடம், விற்பனை மையம், மழைநீர் வடிகால் வசதி, 2 இலட்சம் கொள்ளளவு நீர் சேமிப்பு தொட்டி அமைத்தல், பேவர் பிளாக் பாதை அமைத்தல், RO பிளான்ட் அமைத்தல், புல்வெளி அமைத்தல், செயற்கை நீரூற்று அமைத்தல், ஒளி ஒலி காட்சி அமைத்தல்,

சிதிலமைடைந்த மின் சாதனங்கள், மின் இணைப்புகள் மாற்றுதல், கூட்ட அரங்கம் மற்றும் குறள்மணி மாடத்தில் குளிர்சாதன வசதி, தீ தடுப்பு வசதிகள், ஒலிபெருக்கி அமைப்பு நிறுவுதல், நுழைவாயில் புதுப்பித்தல் பணி, உயர் அழுத்த மின் வசதி, 250 கே.வி.ஏ. ஜெனரெட்டர், CCTV பொருத்துதல் ஆகியவற்றின் பணி முன்னே ற்றத்தை ஆய்வு செய்தார்.

தோரணவாயில் முகப்பில், அழகு மிளிரச் செய்யும் ஸ்தபதிகளின் பணிகளை பார்வையிட்டு, துரிதமாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்திய பின், உணவகம், நிர்வாகக் கட்டடம், தள கற்கள் பதிக்கப்பட்டு வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், அப்பணிகளை எழிலுர செய்ய தக்க அறிவுரைகள் வழங்கினார்.

### விரைந்து முடிக்க உத்தரவு!

மின் பணிகள் 80% சதவீதம் முடிவடைந்ததை ஆய்வு செய்து, மனநிறைவு அடைந்த அமைச்சர் எ.வ.வேலு , கலையரங்கம், குறள் மணிமண்டபம், தோரணவாயில் கட்டடங்களில் நடைபெற்று வரும் மின் பணிகளையும் ஆய்வு செய்து, இப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

பல்லடுக்கு வாகன நிறுத்துமிட கூரை கான்கிரீட் போடப்பட்டுள்ளதை பார்வையிட்டு, கலையரங்கத்தில் பால்ஸ் சீலிங் பணி மற்றும் வால்பேனலிங் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். இது வரை மொத்தமாக 75 சதவீதப் பணிகள் நிறைவு பெற்றுவிட்டன என்பதால், மனநிறைவு அடைந்த அமைச்சர் எ.வ. வேலு, வள்ளுவர் கோட்டத்தில் பொது மக்கள், பார்வையாளர்கள், சுற்றுலா பயணிகள் ஆகியோர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட பல்வேறு வசதிகளை, பொது ப்பணித்து றை பொறியாளர்களிடம் கேட்டறிந்தார்.

இதில் உயரதிகாரிகள் மங்கத்ராம் சர்மா, மணி வண்ணன், இரா.விஸ்வநாத், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் அலுவலர்கள் பங்கேற்றனர்.

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. மதுரை மண்டல மத்திய சங்க நிர்வாகிகள்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. மதுரை மண்டலத்தின் (பதிவு எண். 253/ MDU., பேரவை இணைப்பு எண். 288) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 26.11.2024 அன்று தொ.மு.ச. பேரவை இணைப்பொதுச்செயலாளர் திரு. ஜெ.விஜயகுமார் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய சங்க நிர்வாகிகள்

தலைவர் - எஸ். கார்த்தசுரேஷ், துணைத் தலைவர்கள் - 1) பி. ரவி, 2) என். கண்ணன், 3) எஸ். ரெங்கசாமி, பொதுச்செயலாளர் - மேலூர் வி. அல்போன்ஸ், துணைப் பொதுச் செயலாளர்கள் - 1) கே. முத்துக்குமார், 2) ஐ. அய்யனா,ர் 3) எம். சுரேஷ், பொருளாளர் - எஸ். மணிகண்டன், துணைச்செயலாளர்கள் - 1) ஆர். செல்வநாதன், 2) எஸ். சுந்தரமூர்த்தி 3) எஸ். சோமசுந்தரம், 4) பி. தெய்வேந்திரன், 5) எஸ். சுப்புராஜ், 6) சி. மோகன்ராம், அமைப்புச் செயலாளர் - ஐ. கண்ணன், பிரச்சார செயலாளர் - ஐ. கஜேந்திரன்,

இடம்: கலைஞரகம்
நாள்: 27.12.2024

**(மு.சண்முகம், எம்.பி.)**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

### கழக செயல் மறவர் - திருத்துறைப்பூண்டி - ஒன்றியம் -

# கொத்தமங்கலம் சோமசுந்தரம் மறைவு!

## கழகத்தினர்கள் அஞ்சலி!



திருவாரூர், நவ. 30 -

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் கொத்தமங்கலத்தைச் சேர்ந்த கழக மூத்த உறுப்பினரும், கழக செயல்மறவருமான கொத்தமங்கலம் சோமசுந்தரம் அவர்கள் வயது முதிர்வால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாருக்கு வயது 89. கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரான மறைந்த சோமசுந்தரம் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களின் அன்பினைப்பெற்றவராவார். இவர் கிளைச்செயலாளர், ஒன்றியப்பிரதிநிதி, மாவட்டப்பிரதிநிதி என கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருந்து கழகப்பணியாற்றியவர். கழகம் அறிவித்த போராட்டங்களில் தவறாமல் பங்கேற்றவர். கழக மேடைகளில் சுயமரியாதை சிந்தனைகளை முழங்கியவர். இவர் கழக தலைவர் தளபதி அவர்களின் கரங்களால் பொற்கிழியை பெற்ற பெருமைக்குரியவர்.

மறைந்த சோமசுந்தரம் அவர்களுக்கு மாறன், இளங்கோவன், ரமேஷ், காளிமுத்து என்கிற மகன்கள் உள்ளனர்.

இவரின் மறைவின் தகவலறிந்த கழக நிர்வாகிகளும், கழகத் தோழர்களும் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். சோமசுந்தரம் அவர்களின் இறுதி சடங்குகள் 28.11.2024 வியாழன் அன்று மாலை கொத்தமங்கலம் ஊராட்சி கடியாச்சேரியில் நடைபெற்றது.

### மாமல்லபுரம் - காரைக்காலிடையே

# ஃபெங்கல் புயல் இன்று கரையை கடக்கிறது!

## வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு!

சென்னை, நவ. 30 -

தென்மேற்கு வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்ந்து நகராமல் ஒரே இடத்தில் மையம் கொண்டுள்ளது. இதனால் புயலாக வலுப்பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மிகவும் மெதுவாக நகர்ந்து வந்தது. நேற்று முன்தினம் அதிகாலை 2 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது நகராமல் ஒரே இடத்தில் மையம் கொண்டிருந்தது. இதனால் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறுவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இலங்கை திரிகோணமலைக்கு கிழக்கு வடகிழக்கே 110 கிலோ மீட்டர் தொலைவிலும்,

தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்திற்கு தென்கிழக்கு திசையில் 310 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுவைக்கு தென்கிழக்கு 410 கிலோமீட்டர் தொலைவிலும்,

சென்னைக்கு தெற்கு தென்கிழக்கு 480 கிலோ மீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இலங்கைக் கரையோரப் பகுதியில் வடக்குவடமேற்கு திசையில் நகர்ந்து புயலாக வலுப்பெறும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. ஃபெங்கல் எனப் பெயரிடப்பட உள்ள இந்த புயல் தொடர்ந்து வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து வலுவிழந்து வட தமிழ்நாடு புதுவை கடற்கரை இடையே காரைக்கால் மற்றும் மாமல்லபுரம் இடையே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இன்று கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தென்மேற்கு வங்க கடலில் 65 முதல் 75 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.